**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் நாள் புதன்கிழமை

**I.A.No.04/2025 in O.S.No.261/2022**

**(TNTM03000650/2022)**

K.அம்பிகா ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

J.பூவரசன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 03.09.2025 ஆம் தேதி அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.சரவணபாபு,MBA., ML., திருமதி P. இளமதி, B.A.BL.,(Hons), ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.ராஜமூர்த்தி, B.A.,B.L., திருமதி. R.ஷோபனா, B.Sc.,L.LB., ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணமாக ஏற்க உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 14(3)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கானது மனுதாரர் தரப்பில் விசாரணை செய்ய வாய்தா இன்று 29.01.2025ல் போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு முக்கிய ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றது. எனவே மனுவில் கண்டுள்ள கூடுதல் ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரரின் மனு மோசடியானது, கற்பனையானது, சட்டப்படி மற்றும் நியாயப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரரின் மனுவில் கண்ட அனைத்து சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். இந்த எதிர்மனுதாரர் தானாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர, மற்ற சங்கதிகளை இந்த மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது. இந்த எதிர்மனுதாரர் கூற்றுப்படி மனுதாரர் இந்த எதிர்மனுதாரரை அலைகழிக்க விடவேண்டும் என்றும் மேற்படி வழக்கின் விசாரணையை காலம் கடத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, மேற்படி விசாரணையின் போது தாக்கல் செய்யும் ஆவணங்களைப் பற்றியோ அல்லது அதன் உண்மை நிலவரத்தைப் பற்றியோ தனது எதிர்வாதுரையில் கூறாமல், தற்போது இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்க இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். எனவே மனுதாரரின் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயப்படியும் உள்ளது என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவேன்றால், மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

5. **<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வாய்தா போடப்பட்ட நிலையில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்களாக ஏற்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் வழக்கு சொத்துக்கான வில்லங்க சான்று 4 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் ஆவணங்களாக ஏற்று குறியீடு செய்ய அனுமதிக்கவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், வாதம் செய்யும்போது மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்களாகும். வழக்கை காலம் கடத்தவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள வில்லங்க சான்று குறித்து மனுதாரர்/பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் விவரம் கூறியுள்ளார் என்பது 16.02.2023 தேதியிட்ட எதிர்வழக்குரையை ஆராய்ந்து பார்க்கும்போது தெரியவருகிறது. எனவே மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதிவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.10.08 17:33:14 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.10.08 17:33:23 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.